**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : S.T.C. 709/2024**

**Prosecution witness : ம.சா.1** **Date : 02.09.2025.**

| | |
|---|---|
| **Name : அருள்முருகன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1) எந்த பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூ.7,00,000/- பணம் கொடுத்திருந்தேன். ரூ.1,00,000/- கொடுத்துவிட்டார். மீதமுள்ள ரூ.6,00,000/- மற்றும் வட்டி வசூல் செய்து தர வேண்டி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். இந்த எதிரி மீது எத்தனை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இரண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஒன்று சிவில் வழக்கு மற்றொன்று கிரிமினல் வழக்கு.

2) ஒரு தடவை வாங்கிய கடனுக்காக இரு முறை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு வழக்கு தண்டனைக்காகவும், மற்றொரு வழக்கு பண வசூலுக்காகவும் தாக்கல் செய்தேன். வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு 14.10.2024 ம்தேதி சட்ட அறிவிப்பு அனுப்பினேன். நான் கொடுத்த தகவலின் பேரில் தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் ஆமாம்.

3) நீதிமன்றத்தில் தாக்கல் செய்த புகாரில் எதிரிக்கு தண்டனையும் இருமடக்கு காசோலை நஷ்ட ஈடு கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என்ன தொழில் செய்கிறேன் என்றால் பால் வியாபாரம் மற்றும் விவசாயம் செய்கிறேன். 6 கறவை மாடுகள் வைத்துள்ளேன். விவசாய பூமி 8 ஏக்கர் உள்ளது.

4) சொசைட்டிக்கு பால் ஊற்றி வருகிறேனா என்றால் நேரடியாக வைத்து

ஊற்றி வருகிறேன். சுமாராக ஒரு நாளைக்கு எவ்வளவு ரூபாய்க்கு பால் வியாபாரம் செய்வேன் என்றால் 1500 ரூபாய் வருமானம் வரும். எதிரி எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 2021ம் ஆண்டு முதல் பழக்கம். இந்த வரவு செலவிற்கு முன்னர் ஏதேனும் வரவு செலவு செய்துள்ளேனா என்றால் ரூ.5000/-, ரூ.10,000/- வாங்குவார் அதை திரும்ப கொடுத்துவிடுவார்.

5) ரூ.5000/-, ரூ.10,000/- கடன் கொடுக்கும் போது எதிரியிடம் ஏதேனும் ஆவணம் வாங்குவேனா என்றால் ஏதும் வாங்கமாட்டேன். என்னிடம் வாங்கிய ரூ.7,00,000/- பணத்திற்கு மாதம் வட்டி ரூ.10,500/- ஆகும். எத்தனை மாதம் வட்டி கட்டினார் என்றால் சுமார் 1 வருடம் வட்டி பணம் கட்டினார். ஒரு வருடமும் சரியாக வட்டி கொடுத்தாரா என்றால் முன் பின் கொடுத்தார்.

6) நேரடியாக கொடுப்பாரா அல்லது வங்கி மூலம் பரிவர்தனை செய்வாரா என்றால் நேரடியாகவும் கொடுப்பார், வங்கி மூலமாகவும் பண பரிவர்த்தனை செய்வார். வங்கி மூலமாக எவ்வளவு பண பரிவர்த்தனை செய்தார் என்றால் சுமாராக ரூ.1,16,500/- வரை அனுப்பியுள்ளார். நேரடியாக எவ்வளவு பணம் கொடுத்துள்ளார் என்றால் கைமாற்றாக வாங்கிய பணத்தை கொடுத்தார்.

7) ரூ.7,00,000/- பணம் வாங்கிய பின்னரும் பணம் என்னிடம் கடனாக பணம் வாங்கியுள்ளாரா என்றால் வாஙகியுள்ளார். ரூ.5000/-, ரூ.10,000/- வாங்கியுள்ளார். எப்பொழுது வாங்கினார் என்றால் சரியாக நினைவில்லை. வழக்கு காசோலையை எதிரி என்று எங்கு வைத்து என்னிடம் கொடுத்தார் என்றால் 06.07.2023ம் தேதி கொடுத்தார். (சாட்சி மீண்டும் 05.10.2024ம் தேதி கொடுத்ததாக சொல்கிறார்).

8. 05.10.2024 தேதியிட்ட காசோலையை 05.10.2024ம் தேதியிலேயே என்னிடம் கொடுத்தார். எங்கு வைத்து கொடுத்தார் என்றால் ஜலகண்டாபுரத்தில் உள்ள என்னுடைய பால் கடையில் வைத்து கொடுத்தார். காசோலையை எதிரி எனக்கு கொடுத்த சமயம் யார் யார் அங்கிருந்தார்கள் என்றால் சுரேஷ், பொன்ராம் ஆகியோர் இருந்தார்கள். நேரம் என்னவென்றால் காலை 7.20 மணியிருக்கும்.

9. காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம். அனைத்து

விவரங்களையும் பூர்த்தி செய்து தான் காசோலையை எதிரி என்னிடம் கொடுத்தார். என்முன்பாக எதையும் பூர்த்தி செய்யவில்லை என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் இந்த வழக்கு காசோலையை என்று கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. ரூ.7,00,000/- பணத்தை நான் எப்போது கொடுத்தேன் என்றால் 06.07.2023 ம் தேதி அன்று கொடுத்தேன்.

10. அதற்கு முன்பே என்னிடம் பணம் ஏதாவது கேட்டிருந்தாரா என்றால் நான்கு நாட்களுக்கு முன்பாக கேட்டார். அந்த விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ரூ.7,00,000/- பணம் எப்படி வந்தது என்றால் தென்னை மரம் குத்தகைக்கு விட்ட பணம், ஒரு இடம் என் தம்பி பெயரில் உள்ளதை விற்றதிலிருந்து வந்த பணத்தை வைத்து கொடுத்தேன்.

11. குத்தகை யாருக்கு எவ்வளவு கொடுத்தேன் என்றால் பெருமாகவுண்டனூரை சேர்ந்த சீனிவாசன் என்பவருக்கு ரூ.3,00,000/- க்கு கொடுத்தேன். என் தம்பி பெயரில் உள்ள இடத்தை யாருக்கு எவ்வளவு பணத்திற்கு விற்றார்கள் என்றால் ஆறுமுகம் என்பவருக்கு ரூ.16,00,000/-க்கு சுமாராக இரண்டு மாதத்திற்கு முன்பாக விற்பனை செய்தார்கள்.

12. என் தம்பியின் இடத்தை விற்றதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். குத்தகைக்கு விட்டதை எழுத்து பூர்வமாக எழுதி வாங்கியுள்ளேனா என்றால் வாய்மொழியாக தான் குத்தகைக்கு விட்டேன். நான் தம்பி விற்பனை செய்த ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

**ஆவணம் தாக்கல் செய்ய குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**